**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

M.C.O.P. No.14/2024

DEPOSITION OF WITNESS FOR PW-3

| | |
|---|---|
| NAME | : திரு.கோபாலகிருஷ்ணன் |
| Father/ Husband NAME | : திரு. மோகன் |
| VILLAGE | : ஆறுமுகநேரி |
| TALUK | : திருச்செந்தூர் |
| CALLING | : மனுதாரர் தரப்பு சாட்சி |
| AGE | : 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of September 2025.

முதல் விசாரணை :–

நான் இந்த வழக்கில் மூன்றாம் நபர். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகநேரியில் உள்ள DCW Limited கம்பெனியில் Senior Manager (HR, Legal) ஆக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் கம்பெனியின் சார்பாக எனது சாட்சியம் அளிக்க கொடுக்கப்பட்ட கடிதம் சா.சா.ஆ.1. ஆத்தூர், குச்சிகாடு கதவு எண்.1/369, இசக்கியம்மன் கோவில் தெருவில் வசித்த செந்தில் குமார் என்பவரை என்னுடைய நிறுவனத்தில் Filed Engineer ஆக 10.02.2021ல் பணியில் சேர்த்தோம். அதற்கான எங்கள் கம்பெனியின் பணி நியமன ஆணை சா.சா.ஆ.2. அவர் அக்டோபர் 2023ல்

பெற்ற சம்பளத்திற்கான சம்பள சான்றிதழ் சா.சா.ஆ.3 ஆகும். அவர் 29.10.2023 ல் விபத்தில் இறந்துவிட்டதாக எங்களுக்கு தெரிய வந்தது. எங்களுடைய பதிவேடின் படி அவருடைய பிறந்த தேதி 03.05.1979 ஆகும். அதற்கான 10ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் நகல் சா.சா.ஆ.4. (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது)

2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

இறந்து போன செந்தில்குமார் என்பவருக்கு எங்கள் நிறுவனத்தின் மூலம் குருப் இன்சூரன்ஸ் திட்டத்தின் மூலம் இறப்பிற்கு பின்பு அவருக்கு கிடைக்க வேண்டிய தொகை ரூ.3,00,000/- முதல் ரூ.4,00,000/- பெற்றிருப்பார். இறந்து போனவருக்கு எங்கள் நிறுவனத்திலிருந்து பணிகொடை, வருங்கால வைப்பு நிதி ஆகியவைகளை கணக்கிட்டு கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். அதன்படி அவருக்கு சட்டப்படியாக கொடுக்க வேண்டிய விடுமுறைக்கான சம்பளம் ரூ.52,000/- கொடுக்கப்பட்டுள்ளது. அவர் பணிகொடை சட்டத்தின் அடிப்படையில் 5 ஆண்டுகள் பூர்த்தி ஆகியிருந்தால் மட்டுமே எதிர்காலத்திற்கான பணிகொடை வழங்கப்படும். நிர்வாகம் நினைத்தால் அவரை எப்போதும் பணியிலிருந்து நீக்கிவிடலாம் என்றால் முறையான விசாரணையின் பேரில் தான் நீக்க முடியும். இறந்த செந்தில்குமாருக்கு ESI யின் படி Benefit கிடைப்பதற்கான சம்பள வரம்பை தாண்டி சம்பளம் பெற்றதால் அவருக்கு உரிமையில்லை. அவருடைய மொத்த சம்பளம் ரூ.27,482/-ஆகும். அதில் பிடித்தம் ரூ.4,662/-ஆகும். அவருடைய நிகர சம்பளம் ரூ.22,820 என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை :இல்லை</u>